சுருக்கம்

வேளாண்மைத்துறை – வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகம் – ஒழுங்குமுறை விற்பனைக்கூடங்கள் – 20 மருத்துவ மையங்களில் பணிபுரியும் மருத்துவர்கள் மற்றும் மருத்துவ உதவியாளர்களுக்கு தொகுப்பூதியத்தை உயர்த்துதல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

வேளாண்மை (வேவி.1) துறை

அரசாணை(நிலை) எண்.16

நாள்: 27.01.2017

திருவள்ளுவர் ஆண்டு 2048,
தைத் திங்கள் 14–ஆம் நாள்

படிக்கப்பட்டவை:

1. அரசாணை (நிலை) எண்.114, வேளாண்மை (வேவி.2) துறை, நாள் 18.03.1997.
2. அரசாணை (நிலை) எண்.315, வேளாண்மை (வேவி.2) துறை, நாள் 10.08.2000
3. அரசாணை (நிலை) எண்.313, வேளாண்மை (வேவி.2) துறை, நாள் 02.11.2006.
4. தமிழ்நாடு மாநில வேளாண்மை விற்பனைக்குழுக்களின் மருத்துவர்கள் சங்கம் கோரிக்கை மனு, நாள் 19.08.2011, 18.09.2012 மற்றும் 16.04.2013.
5. வேளாண்மை விற்பனை விற்பனை மற்றும் வேளாண் வணிக இயக்குநரின் கடித எண்.விகுப.4/13952/2012, நாள் 21.01.2013, 29.08.2013, 06.02.2014 மற்றும் 19.09.2014.

------

ஆணை:

மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில் தமிழ்நாட்டில் விவசாயிகளுக்கென ஆரம்பிக்கப்பட்ட இலவச மருத்துவத்திட்டத்தின் கீழ் விற்பனைக்குழுவின் கீழ் செயல்படும் 10 ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களில் 10 மருத்துவ மையங்கள் துவக்கப்பட்டு ஒரு நாளைக்கு 2 முதல் 3 மணி நேரம் வரை விற்பனை கூட மருத்துவ மையங்களில் பணிபுரிய B.S.M.S., B.H.M.S மற்றும் M.B.B.S. உள்ளிட்ட மருத்துவக் கல்வித் தகுதிகளில் ஏதேனுமொன்றை பெற்றிருக்க வேண்டும் என்ற நிபந்தனையின் அடிப்படையில் ரூ.2,500/– மாத தொகுப்பூதியத்தில் 10 மருத்துவர்களையும், ரூ.750/– மாத தொகுப்பூதியத்தில் 10 மருத்துவ உதவியாளர்களையும் தற்காலிகமாக நியமிக்க ஆணையிடப்பட்டது.

2. மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில் கூடுதலாக 10 விற்பனைக் கூடங்களில் 10 மருத்துவ மையங்கள் நிறுவப்பட்டதுடன், அதனடிப்படையில், 10 மருத்துவர்களும், 10 மருத்துவ உதவியாளர்களும் தற்காலிகமாக பகுதிநேர அடிப்படையில் கூடுதலாக நியமிக்கப்பட ஆணையிட்டதுடன், அம்மருத்துவர்களின் தொகுப்பூதியம் ரூ.2,500/–லிருந்து ரூ.3,500/–ஆகவும், மருத்துவ உதவியாளர்களின் தொகுப்பூதியம் ரூ.750/–லிருந்து ரூ.1,250/– ஆகவும் உயர்த்தி நிர்ணயம் செய்து ஆணையிடப்பட்டது.

3. மேலே மூன்றாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில் மேற்படி மருத்துவர்களின் தொகுப்பூதியம் ரூ.3,500/–லிருந்து ரூ.4,500/–எனவும், மருத்துவ உதவியாளர்களின் தொகுப்பூதியம் ரூ.1,250/–லிருந்து ரூ.1,750/– எனவும் முறையே உயர்த்தி ஆணையிடப்பட்டது.

[த.பி.பா.]

4. தமிழ்நாடு வேளாண்மை விற்பனைக்குழு மருத்துவ அலுவலர்கள் சங்கத்தினர் மேலே நான்காவதாகப் படிக்கப்பட்ட தம்முடைய கோரிக்கை மனுக்களில், வேளாண்மை விற்பனைக்குழுக்களில் உள்ள 20 மருத்துவ மையங்களில் தற்பொழுது 14 மருத்துவர்கள் மற்றும் 9 மருத்துவ உதவியாளர்கள் மட்டுமே பகுதிநேர அடிப்படையில் பணிபுரிந்து வருவதாகவும், தங்களில் மருத்துவர்களின் தொகுப்பூதியம் ரூ.3,500/—லிருந்து ரூ.4,500/— எனவும், மருத்துவ உதவியாளர்களின் தொகுப்பூதியம் ரூ.1,250/—லிருந்து ரூ.1,750/— எனவும் கடந்த 2006 ஆம் ஆண்டில் உயர்த்தப்பட்டது எனவும், அதன்பின்னர் சுமார் 7 ஆண்டுகளுக்கு மேலாகியும் தங்களுக்கு எவ்வித ஊதிய உயர்வும் வழங்கப்படவில்லை என்பதால், தற்போது பகுதிநேர அடிப்படையில் பணிபுரியும் மருத்துவர்கள் மற்றும் மருத்துவ உதவியாளர்கள் ஆகியோரின் மாதாந்திர தொகுப்பூதியத்தினை உயர்த்தி வழங்கி உரிய ஆணை பிறப்பிக்குமாறு கோரியிருந்தனர்.

5. வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிக ஆணையர் மேலே ஐந்தாவதாகப் படிக்கப்பட்ட தம்முடைய கடிதங்களில், தற்போதைய தொகுப்பூதியம் அன்றாட அத்தியாவசிய குடும்பச் செலவுகளுக்குக்கூட போதுமானதாக இல்லையென்ற பரிதாபகரமான சூழ்நிலையில் விற்பனைக்கூட மருத்துவர் மற்றும் மருத்துவ உதவியாளர்கள் பணிபுரிந்து வருவதாகவும், ஒழுங்குமுறை விற்பனைக்கூடங்களில் செயல்பட்டுவரும் இலவச மருத்துவ மையங்களில் பணிபுரிந்து வருகின்ற மருத்துவர்கள் மற்றும் மருத்துவ உதவியாளர்கள் அனைவரும் வேலைவாய்ப்பு அலுவலகத்தின் மூலமாக நேர்முகத் தேர்வின் வாயிலாக தெரிவு செய்யப்பட்டு 1997—1998—ஆம் ஆண்டு முதல் (15 ஆண்டுகளுக்கு மேலாக) பணிபுரிந்து வருகின்றனர் என்றும், அவர்கள் இப்பணியினை முதன்மையாகக் கருதி பணிபுரிந்து வருவதாலும், தற்போதைய சூழ்நிலையில் வேறு அரசுப் பணிகளுக்கு அவர்கள் செல்ல இயலாத நிலையில் உள்ளதை கருத்திற்கொண்டும், மருத்துவர்கள் மற்றும் மருத்துவ உதவியாளர்களுக்கு 2006—ஆம் ஆண்டில் நிர்ணயிக்கப்பட்டு, தற்போதுவரை பெற்றுவரும் மாதாந்திர தொகுப்பூதியத்தை அவசியம் மறுபரிசீலனை செய்து உயர்த்தி வழங்கிட வேண்டியுள்ளது என்றும் தெரிவித்துள்ளார்.

6. மேலும், மருத்துவர்களுக்கு வழங்கப்பட்டு வரும் ரூ.4,500/— மற்றும் மருத்துவ உதவியாளர்களுக்கு வழங்கப்பட்டு வரும் ரூ.1,750/— தொகுப்பூதியமானது தற்போது வேளாண் தினக்கூலி தொழிலாளர்களுக்கு நாளொன்றுக்கு அனுமதிக்கப்பட்டுள்ள தினக்கூலியைக்காட்டிலும் குறைவாக உள்ளதுடன், விற்பனைக்குழுக்களில் பணிபுரிந்துவரும் கடைநிலை ஊழியர்களுக்கு வழங்கப்பட்டு வரும் காலமுறை ஊதியத்தைவிடவும் குறைவாக உள்ளதென்றும், எனவே தமிழ்நாடு மாநில வேளாண்மை விற்பனைக்குழு மருத்துவர்கள் சங்கத்தின் கோரிக்கைகளைக் கருத்திற்கொண்டு, பொது சுகாதாரத் துறையில் பணிபுரியும் முழுநேர மருத்துவர்கள் பெறும் சம்பளத்தை அடிப்படையாகக் கொண்டு, ஒழுங்குமுறை விற்பனைக்கூடங்களில் பணிபுரிந்து வரும் மருத்துவர்களைப் பொறுத்தவரை அவர்கள் நாளொன்றுக்கு 5 மணி நேரம் பணிபுரிய வேண்டும் என்பதன் அடிப்படையில் அவர்களின் மாத தொகுப்பூதியத்தை ரூ.4,500/— லிருந்து ரூ.23,800/— ஆகவும், மருத்துவ டிப்ளமோ பெற்ற மருத்துவ உதவியாளர்களின் மாத தொகுப்பூதியத்தை ரூ.1,750/— லிருந்து ரூ.15,300/— ஆகவும், மற்றும் S.S.L.C. கல்வித்தகுதி பெற்ற மருத்துவ உதவியாளர்களுக்கு மாத ஊதியம் ரூ.7,000/— ஆகவும் உயர்த்தி வழங்குமாறு வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிக ஆணையர் அரசைக் கேட்டுக்கொண்டுள்ளார். மேலும், தற்போது ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களில் S.S.L.C. கல்வித் தகுதி பெற்ற மருத்துவ உதவியாளர்கள் மட்டுமே பணிபுரிந்து வருகிறார்கள் என்றும், மருத்துவ டிப்ளமோ தகுதி பெற்ற மருத்துவ உதவியாளர்கள் யாருமில்லை என்றும் தெரிவித்துள்ளார்.

[த.பி.பா.]

7. வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிக ஆணையரின் கருத்துருவினை அரசு கவனமுடன் பரிசீலித்து, தற்போதைய விலைவாசி உயர்வினைக் கருத்திற்கொள்ளும்போது, குடும்பத்திற்கு தேவையான அத்தியாவசிய பொருட்கள், மருத்துவச் செலவு, குழந்தைகளின் கல்விச்செலவு போன்ற இன்றியமையாத செலவுகளுக்குக்கூட மேற்படி மருத்துவர்கள் மற்றும் மருத்துவ உதவியாளர்களுக்கு 2006 ஆம் ஆண்டில் நிர்ணயம் செய்யப்பட்ட தொகுப்பூதியம் போதுமானதல்ல என்பதைக் கருத்திற்கொண்டும், இப்பகுதி நேரப்பணியாளர்கள் தற்போது பெற்று வரும் தொகுப்பூதியம் விவசாயத் தொழிலாளர்கள் நாளொன்றுக்குப் பெறும் ஊதியத்தைவிடக் குறைவாக உள்ளது என்பதைக் கருத்திற்கொண்டும், இப்பகுதிநேரப் பணியாளர்கள் வேலைவாய்ப்பகம் மூலம் முறையாகத் தேர்வு செய்யப்பட்டுள்ளது மட்டுமின்றி, இதனால் வேலைவாய்ப்பகத்தில் மூதுரிமை இரத்து செய்யப்பட்டதையும் மற்றும் இவர்கள் வேறெந்த வேலைவாய்ப்பையும் பெற இயலாது என்பதைக் கருத்திற்கொண்டும், இவர்களில் வெகுசிலரே தொடர்ந்து பணியாற்றி வருவதையும், இவர்கள் 15 ஆண்டுகளாகப் பணியாற்றி வருவதைக் கருத்திற்கொண்டும், இத்தொகுப்பூதிய உயர்வால் ஏற்படும் செலவினம் அந்தந்த விற்பனைக்குழு நிதியின் மூலமே மேற்கொள்ளப்படுவதையும் மற்றும் இதனால் அரசிற்கு எந்தவிதமான நிதிச்சுமையும் இல்லை என்பதைக் கருத்திற்கொண்டும், வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிக ஆணையரின் செயற்குறிப்பினை ஏற்று, விற்பனைக்குழுக்களின் கீழ் செயல்படும் ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களின் மருத்துவ மையங்களில் பகுதிநேர அடிப்படையில் பணிபுரியும் மருத்துவர்களின் மாத தொகுப்பூதியத்தை ரூ.4,500/-லிருந்து ரூ.23,800/- ஆக உயர்த்தி வழங்கவும், S.S.L.C. தகுதிபெற்ற மருத்துவ உதவியாளர்களின் மாத தொகுப்பூதியத்தை ரூ.1,750/-லிருந்து ரூ.7,000/-ஆகவும் உயர்த்தி வழங்கவும் பின்வரும் நிபந்தனைகளுக்குட்பட்டு அரசு ஆணையிடுகிறது:-

i. ஒழுங்குமுறை விற்பனைக்கூட மருத்துவ மையங்களில் மருத்துவர்கள் மற்றும் மருத்துவ உதவியாளர்கள் நாளொன்றுக்கு 5 மணி நேரம் கட்டாயம் பணிபுரிய வேண்டும்.

ii. மேற்கண்ட உயர்த்தப்பட்ட தொகுப்பூதியத்தை வழங்குவதற்கு முன்பாக சம்பந்தப்பட்ட விற்பனைக்குழுவின் மூலம் தீர்மானம் நிறைவேற்றி ஒப்புதல் பெறப்படவேண்டும்.

iii. அரசாணை வெளியிட்ட பிறகு, சம்பந்தப்பட்ட விற்பனைக்குழுவால் தீர்மானம் நிறைவேற்றப்படும் நாள் முதல்தான் இவ்வரசாணையை நடைமுறைப்படுத்த வேண்டும்.

iv. எவ்வித நிலுவைத் தொகையும் வழங்கப்படமாட்டாது.

v. தற்போது ஒழுங்குமுறை விற்பனைக்கூடங்களின் மருத்துவ மையங்களில் பணிபுரியும் மருத்துவர்கள் / மருத்துவ உதவியாளர்கள் ஓய்வு பெற்ற பிறகு ஏற்படும் காலிப்பணியிடங்கள் கண்டிப்பாக நிரப்பப்படக்கூடாது.

8. இவ்வரசாணை, நிதித்துறையின் அ.சா.எண்.4524/கூதசெ(நிதி)/ப்பி/2016, நாள் 25.11.2016-இல் பெறப்பட்ட இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

ககன்தீப் சிங் பேடி
வேளாண்மை உற்பத்தி ஆணையர்
மற்றும் அரசுச் செயலாளர்

பெறுநர்
வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிக ஆணையர், சென்னை-32.
தலைமைக் கணக்காயர், சென்னை-18/(பெயரில்)
முதன்மை மாநில கணக்காயர் (G&SSA) சென்னை-18

[த.பி.பா.]

முதன்மை மாநில கணக்காயர் (E&RSA) சென்னை-18
இருப்பிடத் தணிக்கை அலுவலர், முதன்மை மாநில கணக்காயர்
(பொது மற்றும் சமூகப்பிரிவு தணிக்கை) அலுவலகம், தலைமைச் செயலகம், சென்னை-9

<u>நகல்</u>

தலைமைச் செயல் அலுவலர், தமிழ்நாடு மாநில வேளாண்மை விற்பனை வாரியம், சென்னை-32.
மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சரின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை-9
நிதித்துறை, சென்னை-9
வேளாண்மை (அ.ந.மு.3) துறை, சென்னை-9
இருப்புக்கோப்பு / உதிரி நகல்.

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

க. சீனிவாசன் 27/11/17
பிரிவு அலுவலர்